ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1958/6 - 2016 මාර්තු මස 15 වැනි අඟහරුවාදා - 2016.03.15

*1958/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**துப்பாக்கிக் கட்டளைச் சட்டம்**

*அனுமதிப் பத்திரமற்ற துப்பாக்கிகளை கையளிப்பதற்கான கால எல்லையை வெளிப்படுத்துதல்*

*1920 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, 1945 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, 1947 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கட்டளைச் சட்டம் மற்றும் 1955 ஆம் ஆண்டின் 18 மற்றும் 22 ஆம் இலக்க, 1975 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, 1980 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, 1981 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, 1996 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்ட (182 ஆம் அத்தியாயமான) துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தில் 30 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாதுகாப்பு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகளை அரசிற்கு கையளிப்பதற்காக முழு நாட்டிற்கும் ஏற்புடையவகையில் கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதன்படி கால எல்லையை வெளிப்படுத்துகிறேன்.*

*மேலும் இந்த கால எல்லைக்குள் அனுமதிப்பத்திரமற்ற துப்பாக்கிகளை கையளிக்கும் போது கையளிக்கும் திகதிக்கு முன் அத் துப்பாக்கியினை தம் பொறுப்பில் வைத்திருத்தல் அல்லது தம்வசம் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்தியதன் காரணமாக துப்பாக்கிக் கட்டளைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவிற்கு முரணான ஏதாவது குற்றத்திற்காக வழங்கப்படும் தண்டம் அல்லது தண்டனைக்கு துப்பாக்கியை கையளித்த நபரை உட்படுத்தக் கூடாது என்று கட்டளையிடுகிறேன்.*

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2016, மாச்சு 01*

**அட்டவணை**

1. அனுமதிப் பத்திரமின்றிய துப்பாக்கிகளை கையளிக்கக்கூடிய இடங்கள் :
   (i) அனைத்து மாவட்ட செயலாளர் அலுவலகங்கள் ;
   (ii) அனைத்து பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ;
   (iii) அனைத்து பொலிஸ் நிலையங்கள்.

2. கால எல்லை :

*2016, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி மு. ப. 9.00 மணி முதல் 2016, மே மாதம் 06 ஆந் திகதி பி. ப. 4.00 மணிவரை.*

*4- 130*



*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*